முருகப்பெருமான் துணை

**மகான் திருநாவுக்கரசர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.07.2023, வெள்ளிக்கிழமை

1. மனுதர்மம் காக்கும் அரங்கனே
மக்களை மதித்துப் போற்ற
ஞானமாக பாமரர்க்கும் அருளி
நம்பிக்கை வளர்க்கும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது மிதுன திங்கள்
அறிவிப்பேன் இருபான்நவதிகதி புகர்வாரம்
**(சோபகிருது வருடம் ஆனி மாதம் 29ம் நாள், 14.07.2023, வெள்ளிக்கிழமை)**
3. வாரமதில் திருநாவுக்கரசர் யானும்
வழங்குவேன் உலகநலம்பெற
பாரதம் எங்கிலும் பண்பான
பக்குவமிக்க சீடர்களை உருவாக்க
4. உருவாக்க தரும வேலியிட்டு
உயிர்கொலை நீக்கி வாழுகின்ற
தரும ஞான வழிகாட்டும் அரங்கன்
தயவை தொடர்பை மக்கள் பெற்றுவர
5. வருகவே நல்லறிவு குணமுடன்
வள்ளல் தன்மை பெருகி
பெருமைபட மற்றவரை மதிக்கும்
பிறர்மனம் புண்படுத்தா வாழும்
6. வாழும் ஞானவான்களாகவே
வருமுலகில் சிறந்து நன்கு
ஆளுமைதனை ஞானவழி மாற்றும்
ஆற்றல் சக்திமிக்கவர்களாக

7. ஆகவே அரங்கன் தேற்றம்வழி
அனைவரும் ஞானிகளாகச் சிறந்து
வகைபட ஞானயுகம் படைப்பர்
வளர்ச்சி மாற்றம் உலகம் கண்டு
8. கண்டுமே பேரிடர் அல்லலிலா
கலியின் கொடுமைகளில்லா
தொண்டுவழி சிறந்த புவியாக
தேசமெங்கும் தயவே வடிவான
9. வடிவான அரங்கன் படைகளாக
வல்லமை கொண்ட மக்கள்
வடிவேலனார் வழிபாடு செய்து
வருங்காலம் உணரும் வண்ணம்
10. வண்ணமுடன் மேல்நிலை கண்டு
வாழும் காலமே இறைநிலையை
எண்ணம் வழி தானடைந்து நன்கு
எல்லாக்காலமும் நிலைத்து நிற்கும்
11. நிற்கும் ஞானிகளாக மக்கள்
நீதிகாக்கும் நீதி மான்களாகவே
அற்புதங்கள் படைத்து நிற்பர்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–